தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்கு முறைப்படுத்தல் திருத்தச் சட்ட முன்வடிவு!

தனியார் பல்கலைகள் தொடங்க 45 ஏக்கர் நிலம் போதும் எனும் திருத்தத்திற்கு ஒப்புதல்!

சட்டப் பேரவையில் – சட்ட முன்வடிவு மீதான விவாதத்திற்கு அமைச்சர் கோவி.செழியன் பதிலுரை!

சென்னை, அக்.19-

சட்டப் பேரவையில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நேற்று முன் தினம் தனியார் கல்லூரிகள் திருத்தச் சட்ட முன்வடிவு மீதான விவாதத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழால் வாழ்ந்த தன்னிகரில்லாத தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, மாநில சுயாட்சியின் நாயகனாக விளங்குகிற தமிழ்நாடு முதலமைச்சர், உயர்கல்வித் துறையை உயர்த்திச் செல்கிற இந்தத் தருணத்தில் தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத் திருத்தம் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிற உறுப்பினர்கள் அண்ணன் கே.பி. அன்பழகன், கு.செல்வபெருந்தகை, அண்ணன் ம.சிந்தனை செல்வன், அண்ணன் வி.பி. நாகைமாலி, அண்ணன் ட்டி. இராமச்சந்திரன், அண்ணன் ஈ.ஆர். ஈஸ்வரன், அண்ணன் தி.வேல்முருகன், அண்ணன் முனைவர் த. இனிகோ இருதயராஜ், அண்ணன் வி.ஜி.இராஜேந்திரன் ஆகியோர் பல்வேறு கருத்துகளை உயர்கல்வித் துறையினுடைய வளர்ச்சிக்கு எடுத்துரையாற்றியிருக்கிறார்கள். அதில் உறுப்பினர் கே.பி.அன்பழகன் அவர்கள் உரையாற்றும் போது கலைஞர் கொண்டுவந்த அந்த நிலையை நீங்கள் தொடர வேண்டு மென்று இந்தச் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற நிலையில் தன் கருத்தைப் பதிவு செய்தார். ஆனால் 2019-ல் தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகச் சட்டத்தைக் கொண்டு வந்ததே அவருடைய அரசு, அவரது ஆட்சி என்பதை முதலில் இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அதோடு தற்போதுள்ள கல்வி நிறுவனங்கள் அல்லாது புதியதாக ஒரு தனியார் பல்கலைக்கழகம் நிறுவ வழிவகை செய்யப்பட வேண்டும் என்பதுதான் இந்தத் திருத்தத்தினுடைய முக்கிய நோக்கம்; Greenfield University அதாவது புதியதாக ஓர் இடத்தில் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளது. புதிய பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்றால், ஒட்டுமொத்தமாக இதுவரை ஊராட்சிப் பகுதி, நகராட்சிப் பகுதி, மாநகராட்சிப் பகுதி என்று வேறுபாடு இல்லாமல் 100 ஏக்கர் பரப்பளவு ஒரே இடத்தில் இருக்க வேண்டுமென்று வரையறை இருந்தது. அதில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி என்று வகை காணப்பட்டு, அந்தந்தப் பகுதிகளில் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் உயர் கல்வித் துறையை நாம் உயர்ந்த இடத்தில் எடுத்துச் செல்வதற்கான அடையாளங்கள். அதோடு, அண்டை மாநிலங்களில் உள்ள தனியார் பல்கலைக்கழகங்கள் தொடங்க பல்வேறு நிலைப்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. அது கல்வியாளர்களால் கண்காணிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு வழிமுறைகள்!

உதாரணத்திற்கு, அசாம் மாநிலத்தில் நகராட்சிப் பகுதியில் 20 ஏக்கர், மற்ற பகுதியில் 10 ஏக்கர் என்றும், கர்நாடக பகுதியில் மாநகராட்சிப் பகுதிகளில் 25 ஏக்கர், நகராட்சிப் பகுதிகளில் 35 ஏக்கர், உத்தரப்பிரதேசத்தில் நகராட்சிப் பகுதியில் 25 ஏக்கர், கிராமப்புற பகுதியில் 50 ஏக்கர் என்று அண்டை

மாநிலத்தில் உயர்கல்வியினுடைய வளர்ச்சிக்கு தனியார் பல்கலைக்கழகங்கள் துவங்குவதற்கு பல்வேறு வழிமுறைகள் காணப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னதைப்போல, அண்டை மாநிலத்தினுடைய உயர்கல்வியின் வளர்ச்சியில் நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் பங்கெடுக்காமல் தாய் மண்ணிலேயே உயர்கல்வி காண வேண்டுமென்று விரும்புகிற முதலமைச்சர் நம்முடைய தன்னிகரில்லாத முதலமைச்சர் அவர்கள்; அதனால் தான் மாணவர் நலன் காக்க பல்வேறு அறிவிப்புகளை தொடர்ந்து செய்த வண்ணம் இருக்கிறார்கள். அதோடு தனியாரை ஊக்கப்படுத்துவதற்கா என்ற எண்ணத்தை இங்கு உருவாக்கினார்கள்.

மாநில நலன் காத்திடவும், நமது மாணவர்களுடைய உயர் கல்வியில் பாதிக்கப்படாமல், அதிலும் ஆராய்ச்சிக் கல்வியாக உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இதுபோன்ற திருத்தங்களை நாம் மேற்கொண்டு வருகிறோம். அதோடு இடஒதுக்கீட்டிற்கு ஆபத்து என்ற நிலையை, மரியாதைக்குரிய அண்ணன் அன்பழகன் அவர்கள் இங்கே கருத்து தெரிவித்தார்கள்.

பிதாமகன் ஆளுகிற மாநிலம்!

இடஒதுக்கீடு கொள்கையில் பிதாமகன் ஆளுகிற மாநிலம், இந்தியாவில் உண்டு என்றால் அது முதலிடம் நம்முடைய தமிழ்நாடு தான். எனவே, தனியார் பல்கலைக்கழகங்களில் 35 சதவிகித இடங்களை, தமிழ்நாடு மாணவர்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு இடஒதுக்கீடு முறை பின்பற்றப்படும் என்ற வார்த்தைகள் அதில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் எந்த மாற்றமும் இல்லை. மருத்துவம் சார்ந்த படிப்புகளில் சிறுபான்மையினர் அல்லாத நிறுவனங்கள் 65 சதவிகிதம் உள்ளது. தற்போது சிறுபான்மையினர் கல்லூரிகள் 50 சதவிகித இடங்களை அரசுக்கு ஒப்படைக்க வேண்டுமென்று சட்டத்திருத்த மசோதாவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவைகளெல்லாம் உயர்கல்வியில் உயர்ந்த நிலைக்கு நாம் எடுத்துச்செல்வதற்கான சாத்தியக்கூறுகள்தான். அரசு உதவிபெறும் கல்லூரிகள் பாதிக்கப்படுமா? மாணவர்கள் நலன் பாதிக்கப்படாத என்ற நிலையில் உறுப்பினர் இங்கே எடுத்துச்சொன்னார். எந்த நிலையிலும் தனியாருக்கு தாரை வார்க்க வேண்டுமென்ற எண்ணம் உயர் கல்வியில் இல்லாத நிலையில் அனைத்து நிலையில் இருக்கிற ஏழையெளிய மக்கள் உயர்ந்த நிலைக்கு செல்லவேண்டுமென்பதற்கு, அரசு உதவிபெறும் கல்லூரிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும், பல்கலைக்கழகங்களாக மாறும்போது அரசு உதவி பெறும் என்ற நிலை மாற்றப்படும். எனவே, இந்த வரையறையெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ள மசோதா உறுப்பினர் இங்கே இடத்தினுடைய விலையை சொல்லி, 100 ஏக்கர் நிலம் கிடைக்காது, எனவே, அந்த நிலப்பரப்பின் அளவை குறைத்திடவேண்டும் என்ற கருத்தை மரியாதைக்குரிய அண்ணன் ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்களும், மரியாதைக்குரிய நம்முடைய கு.செல்வபெருந்தகை அவர்களும், அருமை அண்ணன் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்களும், இராஜேந்திரன் அவர்களும் குறிப்பிட்டு சொன்னார்கள். அந்தவகையில் ஊரகப் பகுதியில் இருக்கவேண்டிய 50 ஏக்கர் நிலப்பரப்பை 45 ஏக்கர் நிலமாக, அந்த நிலப்பரப்பையும் குறைத்து, உயர்கல்விக்கு உயர்ந்து செல்வதற்கான, வழிவகைகளுக்கு ஆதரவு தெரிவித்த உறுப்பினர்கள் அனைவருக்கும், இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்து, உறுப்பினர் இறுதியாக சொன்னதைபோல் தந்தை வழியை பின்பற்றி, நீங்கள் இந்த மசோதாவில் கவனம் காட்டுகிறீர்கள் என்று சொன்னார்.

தந்தை வழியைப் பின்பற்றும் வீரத் திருமகனாக முதல்வர்!

இந்த அவைக்கு சொல்கிறேன், தந்தை வழியை பின்பற்றி, தமிழ்நாட்டில் மாநில சுயாட்சியை கட்டிகாக்கின்ற தீர்மானத்தை இன்றைக்கும் கொண்டு வந்த, ஒரு வீர திருமகன், முதலமைச்சர், முதலமைச்சராக இருக்கும் வரை உயர்கல்வி உயர்ந்த நிலையில் இருக்கும் என்பதை எடுத்துச்சொல்லி, மசோதாவை ஏகமனதாக நிறைவேற்றி தருமாறு பணிந்து கேட்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலுரை வழங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் 2024-25 க்கு உளுந்து - பச்சை பயறுக்கான

காப்பீட்டுத் தொகையை பெற்றுத் தந்த முதல்வருக்கு நன்றி!

காவேரி டெல்டா பாசனதாரர் முன்னேற்ற சங்கம் அறிக்கை!

மயிலாடுதுறை, அக். 20-

உளுந்து மற்றும் பச்சை பயறுக்கான காப்பீட்டு தொகையை பெற்றுத் தந்த தமிழக முதல்வர் அவர்களுக்கும் வேளாண் மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி!

மயிலாடுதுறை மாவட்டத்தில் 2024 - 25க்கு உளுந்து மற்றும் பயறுக்கான காப்பீடு AICல் செய்த விவசாயிகள் அனைவருக்கும் இன்சூரன்ஸ் தொகையை விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது!

தீபாவளி நேரத்தில் விவசாயிகளுக்கு இது மிகவும் மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

உளுந்துக்கு காப்பீடு செய்த 10,726 நபர்களுக்கு ஆறு கோடியே 47 லட்சம் ரூபாயும் பச்சை பயறுக்கு காப்பீடு செய்த 13,007 நபர்களுக்கு ஏழு கோடியே 43 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 23 ஆயிரத்து 733 விவசாயிகளுக்கு 13 கோடியே 90 லட்சம் ரூபாய் மாநில தொகையினை தீபாவளி நேரத்தில் விடுவித்த தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும் பெற்றுத் தந்த உழவர் நலன் மற்றும் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஹெச். எஸ் ஸ்ரீகாந்த், டி.ஆர்.ஓ. என். உமா மகேஸ்வரி, மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ஜே.சேகர் ஆகியோருக்கு விவசாயிகளின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

(குறிப்பு :மத்திய அரசு அதன் பங்கு உளுந்து பயருக்கான இன்சூரன்ஸ் தொகையை இன்னமும் வழங்கப்படவில்லை என்பதும் தற்போது வரவு வைக்கப்பட்டு வருவது மாநில அரசின் பங்குத்தொகை மட்டும் என்பது குறிப்பிடத்தக்கது)

இவ்வாறு மயிலாடுதுறை மாவட்டம் காவேரி டெல்டா பாசனதாரர் முன்னேற்ற சங்கம் தெரிவித்துள்ளது.

கிணத்துக்கடவு தொகுதியில்

ரூ.8.70 கோடி மதிப்பீட்டில் திட்ட பணிகள்!

மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் – கே.ஈஸ்வரசாமி எம்.பி, துவங்கி வைத்தனர்!

கோவை, அக்.20-

கோவை தெற்கு மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி, கிணத்துக்கடவு மேற்கு, மத்திய மற்றும் வடக்கு ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 8 கோடியே 70 இலட்சத்து 59 ஆயிரம் மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆகியோர் துவங்கி வைத்தனர்.

கோவை தெற்கு மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி கிணத்துக்கடவு மேற்கு ஒன்றியத்துக்குட்பட்ட வடபுதூர் கிராமத்தில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணி, சிக்கலாம்பாளையம் ஊராட்சியில் ரூபாய் 39 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டும் பணி, பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதி, கிணத்துக்கடவு மத்திய ஒன்றியத்துக்குட்பட்ட கோதவாடி ஊராட்சியில் ரூபாய் 200 இலட்சம் மதிப்பீட்டில் ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி, கொண்டம்பட்டி கிராமத்தில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணி, செங்குட்டுபாளையம் கிராமத்தில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணி, வடசித்தூர் ஊராட்சி குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 16.50 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி கட்டும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 18.45 லட்சம் மதிப்பீட்டில் அரசம்பாளையம் ரோடு முதல் வடசித்தூர் ரோடு வரை தார்சாலை அமைக்கும் பணி, காரச்சேரி வடசித்தூர் ரோடு முதல் குரும்பபாளையம் சம்பு வரை ரூபாய் 6.84 இலட்சம் மதிப்பீட்டில் பைப் லைன் விஸ்தரிப்பு செய்யும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 11.94 லட்சம் மதிப்பீட்டில் சைட் எண் 7 முதல் 92 வரை இ.ச.எண்467/2 வடிகால் உடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 3.46 இலட்சம் மதிப்பீட்டில் கிழக்கு முதல் வீதி சைட் எண் 26 முதல் 20 வரை க.ச.எண் 467/2 வடிகாலுடன் கூடிய கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 3.46 இலட்சம் மதிப்பீட்டில் கிழக்கு இரண்டாவது வீதி சைட் எண் 48 க.ச.எண் 467/2 வடிகாலுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 3.46 இலட்சம் மதிப்பீட்டில் மூன்றாவது வீதி சைட் எண் 74 முதல் 68 வரை க.ச.எண் வடிகளுடன் கூடிய கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் 3 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கு முதல் வீதி சைட் எண் 19 முதல் 14 வரை க.ச எண் 467/2 வடிகாலுடன் கூடிய கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்ப பாளையம் கிராமத்தில் ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கு இரண்டாவது வீதி சைட் எண் 43 முதல் 38 வரை க.ச எண் 467/2 வடிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்ப பாளையம் கிராமத்தில் ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கு மூன்றாவது வீதி சைட் எண் 67 முதல் 62 வரை க.ச எண் 467/2 வடிகாலுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 4.65 இலட்சம் மதிப்பீட்டில் சைட் எண் 86 மற்றும் 96ல் கிடைமட்ட உறிஞ்சுகுழி அமைக்கும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டில் மின்விளக்குகள் பொருத்தும் பணி, கிணத்துக்கடவு வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட அரசம்பாளையம் ஊராட்சியில் ரூபாய் 269.22 இலட்சம் மதிப்பீட்டில் காரச்சேரி அங்கன்வாடி முதல் துரை கவுண்டர் தோட்டம் வரை தார் சாலை அமைக்கும் பணி, அரசம்பாளையம் கிராமத்தில் ரூபாய் 91.54 இலட்சம் மதிப்பீட்டில் காரச்சேரி சாலையினை மேம்பாடு செய்யும் பணி, மெட்டுவாவி ஊராட்சியில் ரூபாய் 36.70 இலட்சம் மதிப்பீட்டில் பில்லுமடை முதல் கிழக்குத் தோட்டம் வரை தார் சாலை அமைக்கும் பணி, பெரியகளந்தை கிராமத்தில் ரூபாய் 12.55 இலட்சம் மதிப்பீட்டில் மஞ்சம் பாளையம் நடராஜ் வீடு அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி, மாறால் மற்றும் லோகநாதன் வீடு அருகில் சிறு பாலம் அமைக்கும் பணி, நாராயண நாயக்கன் புதூர் கிராமத்தில் கருப்புராயன் கோவில் அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி, நாராயண நாயக்கன் புதூர் கிராமத்தில் சக்திவேல் வீடு அருகில் சிறு பாலத்துடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, நாராயண நாயக்கன் புதூர் கிராமத்தில் மெயின் ரோடு முதல் மேல்நிலைத் தொட்டி வரை பைப் லைன் விஸ்தரிப்பு செய்யும் பணி என மொத்தம் ரூபாய் 8 கோடியே 70 இலட்சத்து 59 ஆயிரம் மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தனர்.

இதில் கிணத்துக்கடவு மேற்கு ஒன்றிய செயலாளர் செந்தில்குமார், கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சபரி கார்த்திகேயன், பொதுக்குழு உறுப்பினர் நடராஜன், மாவட்ட ஊராட்சி முன்னாள் உறுப்பினர் ராஜன் உள்பட ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் தேர்தல் அட்டவணை நிறுத்தி வைப்பு!

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) நிர்வாகிகள் தேர்தல் நடத்துவது தொடர்பான தேர்தல் அறிவிப்பு அட்டவணை 11.10.2025ம் தேதி வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த மார்ச் மாதத்தில் பெறப்பட்ட வேட்புமனு தாக்கல் செய்தவர்களில் சிலர் இறப்பு, பணி ஓய்வு, இடமாற்றம் காரணமாக போட்டியிட விரும்பிய பொறுப்புகளுக்கு போட்டியிட வாய்ப்பில்லாததாலும் நிர்வாகத்தால் சில பணிமனைகள் நிறுத்தப்பட்டு பணியாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாலும், இவைகளை சரிசெய்து திருத்தப்பட்ட புதிய வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட வேண்டியது அவசியமாகிறது.

எனவே, திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் அடிப்படையில், புதிய வேட்புமனுக்கள் பெறப்பட்டு தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளதால், ஏற்கனவே வெளிவந்துள்ள தேர்தல் தொடர்பான 11.10.2025ம் தேதியிட்ட அறிவிப்பு இரத்துச் செய்யப்படுகிறது. புதிய தேர்தல் அறிவிப்பு அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

"கலைஞரகம்"
சென்னை - 17
நாள் : 18 - 10 - 2025

மு.சண்முகம்
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை

மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்திற்கு தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட தலைமைச் சங்க நிர்வாகிகள் நியமனம் நிறுத்தி வைப்பு!

தலைமைக் கழகம் அறிவிப்பு

மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) நிர்வாகிகள் தேர்தல் குறித்த அறிவிப்பை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு திரும்பப் பெறப்பட்ட நிலையில் ஏற்கனவே நடைபெற்ற வழக்கில் உயர் நீதிமன்ற ஆணைப்படி தேர்தல் நடத்த தொ.மு.ச. பேரவை ஒப்புக் கொண்டவாறு சங்க நிர்வாகிகள் தேர்தல், சங்க விதிகளின்படி நடத்தப்பட வேண்டியுள்ளதால் இடைக்கால ஏற்பாடாக ஏற்கனவே 21.06.2025 அன்று தலைமைக் கழகத்தால்அறிவிக்கப்பட்ட சங்கத்தின் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரின் நியமனங்கள் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்: 18 - 10 - 2025

தலைமைக் கழகம்
தி.மு.க.

கோவை ஜிஆர்டி கல்லூரி, ஆர்.வி.எஸ். பொறியியல் மற்றும் கலைக்கல்லூரி தி.மு.கழகத்தின் தமிழ் மாணவர் மன்ற மாணவர்களை கல்லூரி வாயிலில் சந்தித்து கழகத்தின் சாதனைகளை விளக்கியும், மாணவர் மன்ற முன்னெடுப்புகள் குறித்தும் கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி தலைமையில் ஆலோசனை மேற்கொண்டனர். இதில் கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் சூலூர் பிரபு, சிவப்பிரகாஷ், அந்தோணி ராஜ், தமிழ் மாணவர் மன்ற பொறுப்பாளர் விஜயராகவன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நாகை மாவட்டம் – நாகை நகர கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் நகர கழக செயலாளர் இரா மாரிமுத்து, மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், நகரக் கழக நிர்வாகிகள் இரா. முருகையன், வெற்றிலைக் கடை சிவா, பி.திலகர், ஆர்.ரமணி, அபுபக்கர் மற்றும் பலர் உள்ளனர்

விடுமுறை அறிவிப்பு

இன்று (20.10.2025 - திங்கட்கிழமை) முரசொலி அலுவலகத்திற்கு விடுமுறை. முரசொலியின் அடுத்த இதழ் நாளை மறுநாள் (22.10.2025 - புதன் கிழமை) வழக்கம் போல் வெளிவரும்.

தலைமை நிர்வாகி
முரசொலி